(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

இல. 1(18).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2024 ஆகஸ்ட் 23 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2024 செப்தெம்பர் 03, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 44 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு நகரப் பொருளாதார ஆணைக்குழு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஒருமைப்பாட்டுடன் கொழும்பு துறைமுக நகரத்தின் அதிகாரப் பகுதிக்குள் மற்றும் அங்கிருந்து மேற்கொள்ளப்படும் கரைகடந்த வங்கித் தொழில் தொடர்பாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 யூலை 26 ஆம் திகதிய 2394/66 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.08.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு நகரப் பொருளாதார ஆணைக்குழு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஒருமைப்பாட்டுடன் கொழும்பு துறைமுக நகரத்தின் அதிகாரப் பகுதிக்குள் மற்றும் அங்கிருந்து மேற்கொள்ளப்படும் கரைகடந்த வங்கித் தொழில் தொடர்பாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 யூலை 26 ஆம் திகதிய 2394/67 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.08.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 யூலை 18 ஆம் திகதிய 2393/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.08.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் 11 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 17 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 ஏப்ரல் 30 ஆம் திகதிய 2382/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.08.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2024 செப்தெம்பர் 04, புதன்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பகிரங்க சொத்துக்கள் முகாமை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நாணய மாற்றுண்டியல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2024, செப்தெம்பர் 04, புதன்கிழமை)**

2160/2024

மாண்புமிகு சஞ்ஜீவ எதிரிமான்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை கல்வி வலயத்திலுள்ள தமிழ்மொழிமூல பாடசாலைகளில் 1C பாடசாலைகள் யாவை என்பதையும்;

(ii) அவற்றில் அதிபர் இல்லாத பாடசாலைகள் மற்றும் பிரதி அதிபர் இல்லாத பாடசாலைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அதிபர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்கு வழங்கப்பட்ட அண்மைய நியமனங்களின்போது களுத்துறை கல்வி வலய தமிழ் மொழிமூல ஒருசில பாடசாலைகளுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட பிரதி அதிபர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இதுவரை பிரதி அதிபர் நியமனம் வழங்கப்படாத மக்கொனை, அல்ஹஸனியா மகா வித்தியாலயத்துக்கு அந்நியமனம் கிடைக்கவில்லையென்பதையும்;

(iii) உச்ச அளவில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் மேற்படி பாடசாலையில் கணிதம், ஆங்கிலம், சுகாதாரம், வரலாறு, தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களோடு ஆரம்பப் பிரிவுக்கான ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவுவதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) மேற்படி வித்தியாலயத்தின் பிரதி அதிபர் வெற்றிடம் மற்றும் ஆசிரியர் வெற்றிடம் என்பவற்றை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# 2024 செப்தெம்பர் 18, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

635/2024

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2023 ஆம் ஆண்டில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மனிதப் படுகொலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அது தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை யாது;

(iii) அதில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2023 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டுள்ள போதைப்பொருளின் அளவு யாது;

(ii) மேற்படி போதைப் பொருள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) இலங்கைப் பொலிஸாரினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 'யுக்திய' வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1095/2024

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள காரீய சுரங்கங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அவற்றில் சேவையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) அவற்றில் வருடாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்ற காரீயத்தின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி காரீயம் ஏற்றுமதி செய்யப்படுகின்ற நாடுகள் யாவை என்பதையும்;

(v) உள்நாட்டு உற்பத்திகளுக்கு காரீயம் பயன்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி உற்பத்திகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1126/2024

கௌரவ டீ. வீரசிங்க,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஆட்களுக்கு உரித்தாகும் ஓய்வூதியமானது, பங்களிப்பு ஓய்வூதியம் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களின் பேரில் உரித்தாகும் ஓய்வூதியம் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படுமென நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், எதிர்காலத்தில் மேற்படி அரச ஊழியர்களுக்கு ஓய்வூதிய உரித்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1156/2024

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொருட்களை ஏற்றிச் செல்வதற்காக மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ள வாகனங்களில் பயணிகளை ஏற்றிச் செல்ல முடியுமா என்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களில் பயணிகள் ஏற்றிச் செல்லப்படுகின்றனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) குறித்த வாகனங்களில் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக வழங்கப்பட்டுள்ள சட்டரீதியான அதிகாரம் யாதென்பதையும்;

(iv) பாதுகாப்பற்ற முறையில் பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் விபத்துக்குள்ளாவதன் காரணமாக மரணிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1246/2024

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) இலங்கையில் 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் 'செனல் 4' இனால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவின் முன்னேற்றத்தினையும்;

(ii) இந்தச் சபைக்கும் பொதுமக்களுக்கும் மேற்குறிப்பிட்ட ஆணைக்குழுவின் அறிக்கை கிடைக்கச் செய்யப்படும் திகதியினையும்;

(iii) விசாரணையில் எவ்வித முன்னேற்றமும் இல்லையெனின் அதற்கான காரணங்களையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட தாக்குதல்கள் தொடர்பில் 'செனல் 4' முன்வைத்த இதே குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காகப் பாராளுமன்ற விசேட குழுவொன்றினை நியமித்தமைக்கான காரணங்களையும்;

(ii) மேற்படி குழுவின் முன்னேற்றத்தினையும்;

(iii) எவ்வித முன்னேற்றமும் இல்லையெனின் அதற்கான காரணங்களையும்;

(iv) மேற்படி குழுவின் பரிமாணங்களையும்?

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) குறிப்பிட்ட தாக்குல்கள் பற்றிய ஒரு சுயாதீனமான, சர்வதேச விசாரணைக்கான அழைப்புக்களை அரசாங்கம் மீண்டும் மீண்டும் புறக்கணித்தமைக்கான காரணங்களையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1251/2024

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு.நிலந்த ஜயவர்தன தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் யாவை என்பதையும்;

(ii) அவர் பொலிஸ் நிர்வாகப் பிரிவின் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி, மேற்படி பதவிக்கு அவர் பரிந்துரை செய்யப்பட்ட திகதி மற்றும் குறித்த பதவிக்கு அவரைப் பரிந்துரை செய்த நபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள மேற்படி உத்தியோகத்தரை குறித்த பதவிக்கு நியமிப்பதற்கு ஏதுவாக அமைந்த விடயங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நியமனம் தொடர்பில் மீண்டும் ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1287/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ‘சிரம வாசனா நிதியம்’ ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை மேற்படி நிதியத்தின் மூலமாகப் பயனடைந்த நபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி நிதியத்திற்கு நிதி கிடைக்கப்பெறும் வழிமுறைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி நிதியத்தினை மேலும் வலுப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1705/2024

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாரிய அளவில் அதிகரித்துள்ள விவசாய விதைகளின் விலைகளை ஒழுங்குபடுத்துவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்படுமா என்பதையும்;

(ii) விவசாய விதைகளை இறக்குமதி செய்கின்றபோது கமத்தொழில் அமைச்சினால் எவ்வாறான இடையீடு மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும்;

(iii) இறக்குமதி செய்யப்படுகின்ற விவசாய விதைகளின் விலைகளை கட்டுப்படுத்துவதற்கும் அவற்றின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கும் இடையீடு செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஒரு வருடத்தில் இறக்குமதி செய்யப்படுகின்ற விவசாய விதையினங்கள், அவ்வொவ்வொரு வகையிலும் இறக்குமதி செய்யப்படுகின்ற அளவுகள் மற்றும் அதற்கென உறப்படுகின்ற செலவுகள் என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1731/2024

கௌரவ ஜகத் பிரியங்கர,— நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர்கொழும்பு சிறைச்சாலையில் காணப்படும் அதிக சன நெரிசலுக்குத் தீர்வாக குறிப்பிட்ட சிறைச்சாலையை வென்னப்புவ பிரதேசத்தில் நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்திற்கு அடிப்படைச் செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருப்பின், அத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2005/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024.01.31 ஆம் திகதியாகும்போது அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் இலங்கையின் மருந்து வழங்குனர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை, ஒவ்வொரு மருந்து வழங்குனரின் படியும்;

(ii) இந்திய அரசாங்கத்தின் கடன் உதவியின் கீழ் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளுக்காக 2024.01.31 ஆம் திகதியாகும்போது இந்திய மருந்து வழங்குனர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, ஒவ்வொரு மருந்து வழங்குனரின் படியும்;

வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2024 செப்தெம்பர் 19, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1740/2024

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாறை மாவட்டத்திலுள்ள அரச நெற் களஞ்சியங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவை அமைக்கப்பட்டுள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு களஞ்சியத்திலும் களஞ்சியப்படுத்தக்கூடிய நெல்லின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மேற்படி களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்பட்ட நெல்லின் அளவு ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நெற் களஞ்சியங்களில் இன்றளவில் பயன்படுத்தப்படாத நெற் களஞ்சியங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவற்றின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி களஞ்சியங்களை மீண்டும் பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) அம்பாறை மாவட்டத்திலுள்ள நெற் களஞ்சியங்களிலிருந்து உச்சளவு பயனைப் பெற்றுக்கொள்வதற்காக நடைமுறைப்படுத்தப்படவுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1754/2024

கௌரவ இஷாக் ரஹுமான்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள தலசீமியா நோயாளிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திற்கமைவாக தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) தனியார் வைத்தியசாலையொன்றில் தலசீமியா நோயாளியொருவருக்கு மரபணு மாற்று அறுவை சிகிச்சையொன்றை மேற்கொள்வதற்காக சுமார் 48 இலட்சம் ரூபா பணம் செலவாகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அறுவை சிகிச்சையை அரச வைத்தியசாலைகளில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1874/2024

கௌரவ ரோஹினீ குமாரி விஜேரத்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆயுர்வேத மருத்துவப் பட்டம் (BAMS, BUMS, BSMS) பயின்ற சுமார் 300 பேர் இதுவரையிலும் அவர்களுக்குரிய உள்ளிருப்புப் பயிற்சியின்றி இருப்பதை அறிவாரா;

(ii) அவர்களை உள்ளிருப்புப் பயிற்சிக்கு அனுப்பாமைக்கான காரணங்கள் யாவை;

(iii) அவர்களை உள்ளிருப்புப் பயிற்சிக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

(iv) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1924/2024

கௌரவ ராஜிகா விக்கிரமசிங்ஹ,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கே தனித்துவமானதும் அழிந்து செல்லும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதுமான மூலிகைத் தாவர வகைகள் இனங்காணப் பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி மூலிகைத் தாவர வகைகள் யாவையென்பதையும்;

(iii) அவற்றில் செம்பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ள மூலிகைத் தாவர வகைகள் யாவையென்பதையும்;

(iv) அந்த மூலிகைத் தாவர வகைகளைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1947/2024

கௌரவ மிலான் ஜயதிலக்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு முதல் இதுவரை காபட் இடப்பட்டுள்ள வீதிகளின் நீளம் எத்தனை கிலோமீட்டர் என்பதையும்;

(ii) மேற்படி வீதிகளின் கிலோமீட்டர் அளவானது ஒவ்வொரு மாகாணங்களின் அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் காபட் இடுவதற்கு எதிர்பார்க்கப்படும் வீதிகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வீதிகளின் நீளம் எத்தனை கிலோமீட்டர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1975/2024

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ள நகர்ப்புற வீடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றில் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான வீடுகளின் எண்ணிக்கையும் நடுத்தர வகுப்பினருக்கான வீடுகளின் எண்ணிக்கையும் எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி வீடுகளில் தற்போது பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான வீடுகளின் எண்ணிக்கையும் நடுத்தர வகுப்பினருக்கான வீடுகளின் எண்ணிக்கையும் எத்தனை என்பதையும்;

தனித்தனியாக வருடாந்த அடிப்படையில் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2011/2024

கௌரவ மயந்த திசாநாயக்க,— நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் தூய குடிநீர் வசதிகளில்லாத கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவின் பெயர் மற்றும் தூய குடிநீர் வசதிகள் இல்லாத குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை;

(iii) கண்டி மாவட்டத்தில் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2024/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டில் குழப்பகரமான நிலைமைகளைத் தோற்றுவிக்கக்கூடிய செய்திகளை வெளியிடும் பல போலி ஊடகங்கள் இலங்கையில் செயற்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஊடகங்கள் யாவையென்பதையும்;

(iii) பதிவு செய்யப்படாத போலி இணையத்தளங்களைத் தடை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2050/2024

கௌரவ லலித் எல்லாவல,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களினால் நடாத்திச் செல்லப்படுகின்ற தகனச்சாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) 2023 ஆம் ஆண்டின் மே, யூன் மற்றும் யூலை ஆகிய ஒவ்வொரு மாதமும் மேற்படி தகனச்சாலைகளினால் பயன்படுத்தப்பட்டுள்ள எரிவாயுவின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) தகனம் செய்வதற்குப் பதிலாக மாற்று வழிமுறைகளைக் கையாள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்த மாற்று வழிமுறைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2138/2024

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் மாபேரியதென்ன கிராம அலுவலர் பிரிவிலுள்ள தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான காணியில் வசிக்கும் 235 குடும்பங்களை, மாபேரியதென்ன உள்ளக விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக அக்காணியை விட்டு வெளியேற்றுவதற்கு 2015.04.08 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபையினுடைய ஒப்புதலுடன் கொள்கை ரீதியான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும்;

(ii) மேற்படி தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் இதுவரை காலதாமதம் ஏற்பட்டமையினால் அக்காணியில் வசிப்பவர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளதாகவும்;

(iii) கட்டுமானப் பணிகளின் காரணமாக பல வீடுகளுக்கு சேதமேற்பட்டுள்ளன என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) இவ்விமான நிலையத்தை நிர்மாணிப்பதன் விளைவாக வீடுகளை இழக்கும் நபர்களுக்கு அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் மாற்றுக் காணிகளை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2024 செப்தெம்பர் 20, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

6/2024

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் புகையிரதத் திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் நிர்மாண மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இன்றளவில் பயன்படுத்தப்படுகின்ற காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள், குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி காணிகள் வழங்கப்பட்டுள்ள கம்பனிகள் / நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(v) காணிகளை குத்தகைக்கு வழங்குவதன் மூலமாக இலங்கைப் புகையிரதத் திணைக்களம் வருடாந்தம் ஈட்டுகின்ற வருமானம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

45/2024

கௌரவ புத்திக பத்திறண,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விசேட பாதுகாப்பு அலகின் கீழ் பாராளுமன்ற பொலிஸ் பிரிவிற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் நாள் முழுவதும் பிரமுகர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுகின்றனர் என்பதையும்;

(ii) ஆயினும், சனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் சில சலுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் பாராளுமன்ற பொலிஸ் பிரிவிற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுவதில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாராளுமன்ற பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(ii) ஏனைய பிரமுகர் பாதுகாப்புப் பிரிவுகளில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் ஒவ்வொரு பிரமுகர் பாதுகாப்புச் சேவையின் அடிப்படையில் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) பாராளுமன்ற பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் களுக்கு இன்றளவில் வழங்கப்படாதுள்ள சலுகைகள் மற்றும் கொடுப்பனவுகளை எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

312/2024

கௌரவ ஹேஷா விதானகே,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மின் அலகொன்றை உற்பத்தி செய்வதற்கு இலங்கை மின்சார சபையினால் இன்றளவில் செலவிடப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) சூரிய சக்தி மின் அலகொன்றை உற்பத்தி செய்வதற்கு செலவாகும் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) சூரிய சக்தியின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(v) இன்றேல், அத்தகையதொரு வேலைத்திட்டம் தயாரிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2061/2024

கௌரவ வேலுகுமார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி மாவட்டத்தில் —

(i) அரச தமிழ் பாடசாலைகளில் க.பொ.த. (உயர் தரம்) விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய பாடத் துறைகளில் கல்வி கற்பதற்கான வசதிகளைக் கொண்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கையும் அப்பாடசாலைகளில் விஞ்ஞான, கணித பாடத் துறைகளில் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக யாது;

(ii) க.பொ.த. (உயர் தரம்) விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய பாடத் துறைகளில் கல்வி கற்பதற்கான வசதிகளைக் கொண்டுள்ள தோட்டப் பாடசாலைகளின் எண்ணிக்கையும் அப்பாடசாலைகளில் விஞ்ஞான, கணித பாடத் துறைகளில் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக யாது;

(iii) தோட்டப் பாடசாலைகளில் க.பொ.த. (உயர் தரம்) விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய பாடத் துறைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2088/2024

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புகையிரத பாதுகாப்புச் சேவைக்கான அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி சேவையில் இன்றளவில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது;

(iii) புகையிரதப் பயணிகள் மற்றும் புகையிரதச் சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பில் மிக முக்கிய பணியை நிறைவேற்றும் இச்சேவையினை மேலும் வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2105/2024

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “எக்ஸ்பிரஸ் பேர்ள்” கப்பல் விபத்திற்குரிய நட்டஈட்டை அறவிட்டுக்கொள்வது தொடர்பிலான விடயங்களை ஆராய்வதற்கான விசேட நிபுணர் குழு நியமிக்கப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை எத்தனை;

(iii) மேற்படி ஒவ்வொரு உறுப்பினரதும் பெயர், பதவி, முகவரி மற்றும் கல்வித் தகைமைகள் வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி குழுவானது கூட்டங்களை நடாத்திய நாட்களின் எண்ணிக்கை மற்றும் அத்தகைய கூட்டங்களை நடாத்திய நாட்கள் வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் மேற்படி குழுவானது செயலிழந்துள்ளது என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், அது தொடர்பில் தாக்கம் செலுத்திய காரணிகள் யாவை;

(iii) மேற்படி குழுவானது செயலிழந்துள்ள நிலையில் "எக்ஸ்பிரஸ் பேர்ள்" கப்பல் விபத்திற்குரிய நட்டஈட்டை அறவிட்டுக்கொள்வது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2149/2024

கௌரவ றிஸாட் பதியுதீன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்க ஆசிரியர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக, கிழக்கு மாகாணம் நீங்கலாக, 2018.8.31 திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன என்பதையும் இது தொடர்பான ஒரு திறந்த போட்டிப் பரீட்சை 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது என்பதையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைப் பெறுபேறுகள் 05 வருட நீண்ட இடைவெளியின் பின்னர் வெளியிடப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) எவ்வாறாயினும், நேர்முகப்பரீட்சையின் இறுதிப் பெறுபேறுகள் இது வரை வெளியிடப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவை என்ன அடிப்படையில் நிரப்பப்பட்டன என்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் தற்போதைய நிலை என்னவென்பதையும்;

(iv) மேற்குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நேர்முகப்பரீட்சையினை நடத்துவதன் தற்போதைய முன்னேற்றம் என்னவென்பதையும்;

(v) மேற்குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்கள் இற்றைவரை நிரப்பப்படாவிட்டால், வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ள திகதியினையும்;

(vi) என்ன அடிப்படையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்றன என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2151/2024

கௌரவ இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச தாதியர் பயிற்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கல்லூரிகளால் நடத்தப்படுகின்ற கற்கை நெறி ஒவ்வொன்றினதும் உள்ளடக்கம் மற்றும் பயிற்சிக் காலம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) தாதியர் பயிற்சியை பூர்த்திசெய்த பயிலுநர்களுக்கு வழங்கப்படுகின்ற சான்றிதழ்கள் யாவையென்பதையும்;

(iv) வருடாந்தம் பயிற்சியை நிறைவுசெய்யும் பயிலுநர்களின் எண்ணிக்கை, கல்லூரி வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரச தாதியர் பயிற்சிக் கல்லூரிகளில் மேற்படி பயிற்சியை பெற்றுக்கொள்ளும் பயிலுநர்கள் கட்டாயமாக அரச வைத்தியசாலைகளில் தான் கடமையாற்ற வேண்டுமா என்பதையும்;

(ii) இன்றேல், தனியார் வைத்தியசாலைகள் அல்லது வெளிநாட்டு வைத்தியசாலைகளில் பணியாற்றுவதற்கு அனுமதி உள்ளதா என்பதையும்;

(iii) அரச வைத்தியசாலைகளுக்கான நியமனங்களை இவர்களுக்கு வழங்கும்போது பின்பற்றப்படுகின்ற வழிமுறை யாதென்பதையும்;

(iv) அரச வைத்தியசாலைகளில், தாதியர் பதவியில் ஓராண்டிற்கு எத்தனை வெற்றிடங்கள் ஏற்படுகின்றன என்பதையும்;

(v) மேற்படி எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்கு அரச தாதியர் கல்லூரிகளில் பயிற்சிபெறும் பயிலுநர்களின் எண்ணிக்கை போதுமானதா என்பதையும்;

(vi) இன்றேல், மேற்படி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2165/2024

கௌரவ ரஊப் ஹகீம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொவிட்-19 வைரஸ் தொற்றின் காரணமாக உயிரிழந்தவர்களின் சடலங்களை தகனம் செய்ய வேண்டும் என அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக, தகனம் செய்யப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அவ்வாறு மரணித்த ஒவ்வொரு நபரினதும் பெயர், பாலினம், இனம், சமயம், நெருங்கிய உறவினரின் பெயர், முகவரி, சடலம் தகனம் செய்யப்பட்ட திகதி மற்றும் இடம் தனித் தனியே யாதென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட உயிரிழந்த ஒவ்வொருவரினதும் இறப்புச் சான்றிதழ் இலக்கம், இறப்பு பதிவு செய்யப்பட்ட திகதி மற்றும் மாவட்டம் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2166/2024

கௌரவ சந்திம வீரக்கொடி,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எம்.கே. ரங்கன சுஜீவ என்ற நபர் வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் வழங்கும் சங்கத்தின் நிர்வாக சபைக்கு நியமிக்கப்பட்ட திகதி யாது;

(ii) அச்சந்தர்ப்பத்தில் இவர் வகித்துக்கொண்டிருந்த பதவியில் பணியாற்றிக் கொண்டிருந்தாரா;

(iii) இவர் நிதி மோசடி சம்பவமொன்றுடன் தொடர்புபட்டிருந்தாரா;

(iv) இவரை மேற்படி சங்கத்தின் நிர்வாக சபைக்காக விதப்புரை செய்தவர் யார்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி சங்கத்தின் நிர்வாக சபைக்கு இவரை நியமித்த சந்தர்ப்பத்தில் இவரது சம்பளத்திலிருந்து அங்கத்துவப் பணம் அறவிடப்பட்டிருந்ததா;

(ii) இன்றேல், அங்கத்துவப் பணம் அறவிடப்படாதிருப்பதில் தாக்கம் செலுத்திய காரணங்கள் யாவை;

(iii) மேற்படி சங்கத்தின் துணைவிதிகளின் 5, 2 மற்றும் 6ஆம் பிரிவுகளுக்கமைய அங்கத்துவப் பணம் மற்றும் 3 கடன் தவணைகள் அல்லது அதற்கு மேல் செலுத்துவதனை தவற விட்டுள்ள ஒருவரை நிர்வாக சபைக்கு நியமிக்க முடியுமா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?